**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.34 of 2021**

**Prosecution Witness: PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராஜ்குமார் | **Caste** | : |
| **Father's Name** | : ஜெயபால் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused absent. Petition filed u/s.317 crpc and allowed)**

**Dated.17.05.2023.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டத்தில் உள்ள காணிக்கைபுரத்தில் வசித்து வந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ஜெயபால் என்னுடைய அப்பா ஆவார். கடந்த 03.01.2021ம் தேதி நான், எனது நண்பர் சந்தோஷ்குமார், எனது அப்பா ஜெயபால் என்பவரும் கல்லகத்தில் உள்ள எனது வயலுக்கு வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு நானும், எனது நண்பரும் ஹோண்டா சையின் என்ற இருசக்கர வாகனத்திலும், எனது அப்பா TVS XL TN 61 H 1494 என்ற பதிவெண்ணுடைய இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்னால் திருச்சி–அரியலூர் செல்லும் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையின் இடதுபுறமாக சென்று கொண்டிருந்த போது கல்லகத்தில் உள்ள சந்தனமேரி என்பவரது சோள வயலுக்கு அருகில் மதியம் 3.45 மணியளவில் எதிர்புறம் வந்த அசோக் லைலாண்டு லாரியானது அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் வந்து எனது அப்பா சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து நடைபெற்றது. விபத்து நடைபெற்ற சமயத்தில்

எனது அப்பா சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் சுமார் 50 மீ இடைவெளியில் நாங்கள் பின்தொடர்ந்து வந்தோம், அந்த விபத்தில் எனது அப்பாவிற்கு இடதுபுருவத்திலும், இடது காலிலும், வலது காலில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு எனது அப்பா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பின்னர் எனது அப்பாவை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துவிட்டு அன்றைய தினம் 6.30 மணியளவில் கல்லக்குடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்., அதில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். புகார் **அ.சா.ஆ.1** ஆகும். விபத்தை ஏற்படுத்திய லாரியின் பதிவெண் TN 51 AK 9484 ஆகும், லாரியின் ஓட்டுநர் பெயர் ராபின்சன் ஆகும், அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அடுத்த நாள் பிரேத பரிசோதனை செய்த பின்னர் எனது அப்பாவின் உடலை என்னிடம் ஒப்படைத்தனர், போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)–</u>

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.34 of 2021**

**Prosecution Witness: PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சந்தோஷ்குமார் | **Caste** | : |
| **Father's Name** | : ஆரோக்கியசாமி | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**<u>(Accused absent. Petition filed u/s.317 crpc and allowed)</u>**

**Dated.17.05.2023.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் காணிக்கைபுரத்தில் வசித்து வந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ஜெயபால் என்பவரை எனக்கு தெரியும், அ.சா.1 யை எனக்கு தெரியும், அவர் என்னுடைய நண்பர் ஆவார். கடந்த 03.01.2021 ம் தேதி நான், எனது நண்பர் அ.சா.1, அவரது அப்பாவும் கல்லகத்தில் உள்ள அவரது வயலுக்கு வேலைக்காக சென்றுவிட்டு திரும்ப அ.சா.1 ன் அப்பா இருசக்கர வாகனத்திலும், நானும், அ.சா.1 ம் சேர்ந்து ஒரு இருசக்கர வாகனத்திலும் வந்தோம். அ.சா.1 ன் அப்பா எங்களுக்கு முன்னால் திருச்சி–அரியலூர் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுபுறமாக சென்று கொண்டிருந்த போது கல்லகத்தில் உள்ள சந்தனமேரி சோள வயலுக்கு அருகில் மதியம் 3.45 மணியளவில் எதிரே வந்த அசோக் லைலேண்டு லாரியானது அதிவேகமாவும், கவனகுறைவாகவும் வந்து ஜெயபால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து நடைபெற்றது. விபத்து நடைபெற்ற சமயத்தில் ஜெயபால் 50 மீ தொலைவில் எங்களுக்கு முன்னால் சென்றார். அந்த விபத்தில்

ஜெயபாலுக்கு வலதுபுருவம், வலது கால், இடதுகாலிலும் காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே அவர் இறந்துவிட்டார், அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்பு மாலை 6.30 மணியளவில் கல்லக்குடி காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் கொடுத்தார். மறுநாள் பிரேத பரிசோதனையானது இலால்குடி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற போது நான் சென்றிருந்தேன். விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் TN 51 AK 9484 ஆகும். ஜெயபால் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 61 H 1494 ஆகும். விபத்து ஏற்படுத்திய லாரியை இவ்வழக்கின் எதிரியான ராபின்சன் ஓட்டி வந்தார், அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். போலிசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)–

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.